1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் —(அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

*52 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குலசேகரப்பட்டணம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: குலசேகரப்பட்டிணம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் இல்லை.

தமிழ்நாடு நிலவள வங்கி

*53 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள தமிழ்நாடு நிலவள வங்கியில் தற்போது எத்தனை இயக்குநர்கள் (Directors) இருக்கிறார்கள்?

(இ) இவர்களில் அரசு எத்தனை பேரை நியமனம் செய்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) தற்போது இருக்கின்ற இயக்குநர்களின் எண்ணிக்கை 56.

(இ) ஒருவர்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, 56 இயக்குநர்கள் என்பது 56 சிற்றரசர்களைப்போல் இருக்கின்றது. ஒரு நிர்வாகத்தின் கீழ் இது போன்று 56 இயக்குநர்கள் தேவைதானா என்பதை அரசு ஆலோசித்து இந்த இயக்குநர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 1967-க்கு முன்பு இந்த வங்கிகளில் அரைக் கோடி ரூபாய்க்கு மேல் வரவு-செலவு இருக்குமானால் அதற்கு ஒரு இயக்குநர் என்ற அளவில் இயக்குநர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இப்போது வரவு-செலவு ரூபாய் 2 கோடிக்கு இருந்தால் தான் ஒரு இயக்குநர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனவே எண்ணிக்கை குறையுமே தவிர ஏறாது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அரசாங்கம் எத்தனை இயக்குநர்களை நியமித்திருக்கிறது? அவர்கள் எந்தத்தகுதி அடிப்படையில் நியமிக்கப்பட்டார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இப்போது அரசாங்கம் ஒருவரை இயக்குநராக நியமித்திருக்கிறது. அதாவது அடிஷனல் கூட்டுப் பதிவாளர் அவர்களை நியமித்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, அரசாங்கம் ஒருவரை நியமித்திருப்பதாகச் சொன்னூர்கள். ஆனல் ரெஜிஸ்டிரார் ஆப் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் பலரை டைரக்டர்களாக நியமிக்கலாம், என்று அறிகிறேன். அப்படி அவரால் நியமிக்கப்படுகிறவர்களுக்கு என்ன குவாலிஃபிக்கேஷன் இருக்கவேண்டும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அரசு வேறு. பதிவாளர் வேறு. அவர் நியமனம் செய்வது, கடன் வாங்குபவர்களான சிறிய விவசாயிகள், அதாவது 2½ ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளவர்களில், 3 பேரும், தாழ்த்தப்பட்டவர்களில் 3 பேரும், மலை ஜாதியினரில் ஒருவரும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, would there be nomination for ladies in such banks? The Government support the minorities and the weaker section and so I think the women must have representation in such banks?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, does the hon. Member think that ladies form a weaker section?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த இயக்குநர் பட்டியலில் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிறூர்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, பட்டியல் என்னிடம் இல்லை. ஆனல் இயக்குநர் பட்டியலில் முஸ்லிம்கள் சிலரின் பெயர்களைப் பார்த்ததாக நினைவு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 54-யும் 65-யும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

அரசுப் பேருந்துகளில் பயணக் கட்டணங்கள்

* 54 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசாங்கம் சமீபத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்தி உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனல் எதிர்பார்க்கப்படும் வருவாய் எவ்வளவு ?